# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 298/18 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | திரு. சுப்பிரமணியம் |
| Father's Name | -- | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the Day of 03.06.2019

முதல் விசாரணை :

நான் வஞ்சிபாயைத்தில் குடியிருந்துவருகிறேன். நான் விவசாயம்வேலை செய்துவருகிறேன். கோழி பண்ணை வைத்திருக்கிறேன். எதிரிகளைத் தெரியும். பக்கத்து தோட்டத்துக்காரர்கள். 28-11-2015 தேதியன்று மாலை 6.30 மணியளவில் எனது கோழிப்பண்ணைக்கு கோழி தீவனம் ஏற்றிக்கொண்டு வந்த வண்டியை எதிரிகள் குறுக்காட்டினார்கள். நான் ஏன் குறுக்காட்டுகிறீர்கள் என்று கேட்டபோது ரத்தினசாமி தன் கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் இடது தோள்பட்டையில் அடித்துவிட்டார். நடராஜன் இரும்பு கம்பியால் என் முதுகில் அடித்தார். என்னுடன் எனது சித்தப்பா ஆறுச்சாமி இருந்தார். ஆறுச்சாமியை ரத்தினசாமி பின்புற தோள்பட்டையில் இரும்பு கம்பியால் அடித்துவிட்டார். அதன்பின்னர் பக்கத்தில் உள்ளவர்கள் வந்துவிட்டார்கள். நாங்கள் இருவரும் அரசு மருத்துவமனை, பொள்ளாச்சியில் சிகிச்சைக்காக சேர்ந்தோம். போலிசார் அங்கு வந்து விசாரித்த போது நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் வாக்குமூலம் அதசாஆ.1 . எங்களை எதிரிகள் அடிக்க பயன்படுத்திய இரும்பு கம்பியை என்னால் அடையாளம் காட்டமுடியும். என்னிடம் காட்டப்படும் இரும்புகம்பிகள் தான் அவை. அது சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பில்குவி இல்லை